ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2202/24 - 2020 නොවැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2020.11.20

*2202/24 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

*அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களைக் கையளித்தல்*

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57 (I) ஆம் உறுப்புரையின் 1 ஆவது பந்தியின் நியதிகளுக்கு அமைவாக கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், இலங்கைப் பொலிஸ் சேவையின் உத்தியோகத்தர்களின் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் அந்த அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கையளிக்கப்படுகின்றது.

2. இல. 2161/32 மற்றும் 2020.02.06 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள அதிகாரக் கையளிப்பின் கீழ் எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுக்கப்படுமெனக் கருதப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு பாதிப்பு அற்ற வகையில் அந்த வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்படுகின்றதென்பதை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இத்தால் குறித்துரைக்கப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் படி,

**எம். ஏ. பீ. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 1200/9, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, நவெம்பர் 19,

1A - G 33220 — 31 (2020/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| நிரல் I<br><br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br><br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br><br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 01. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அதற்கு மேலுள்ள வரிசையினர் | பொலிஸ்விடயத்திற்குப்பொறுப்பான அமைச்சரது அமைச்சின் செயலாளர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நடவடிக்கை முறைக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்.<br><br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு.<br><br>(III) ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழ் ஓய்வுபெறுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |
| 02. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்<br>பொலிஸ் அத்தியட்சகர்<br>உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தரங்கள் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் | பொலிஸ்விடயத்திற்குப்பொறுப்பான அமைச்சரது அமைச்சின் செயலாளர் | (I) பொலிஸ்மா அதிபரின் சிபாரிசுக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் 218 முதல் 223 வரையிலான ஏற்பாடுகளுக்கு அமைய இடமாற்றம் செய்தல். |
| 03. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் | பொலிஸ்மா அதிபர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நடவடிக்கை முறைக்கு அமைவாக நியமனம் மற்றும் இடமாற்றம் செய்தல். |
| 04. பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினர் (பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் அடங்கலாக)<br>பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்கள்<br>இணைந்த சேவைகளைச் சாராத, இல. 03/2016 எனும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் (அட்டவணை III) இல் பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் | பொலிஸ்மா அதிபர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் / சேவைப் பிரமாணக் குறிப்புகளுக்கு அமைவாக நியமனம் மற்றும் பதவி உயர்வு. (விசேட பதவி உயர்வுகள் தவிர)<br><br>(II) தகுதிகூர்நிலைக் காலத்திற்குள் நியமனத்தை இரத்துச் செய்தல் அல்லது சேவையை முடிவுறுத்தல்.<br><br>(III) தகுதிகூர்நிலைக் காலத்தின் அல்லது பதில் கடமைக் காலத்தின் பின்னர் சேவை நிரந்தரமாக்கல் அல்லது தகுதிகூர்நிலைக் காலத்தை அல்லது பதில் கடமைக் காலத்தை நீடிப்புச் செய்தல்.<br><br>(IV) பதவி விலகல் கடிதங்களை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல்.<br><br>(V) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நடவடிக்கை முறைக்கு அமைவாக இடமாற்றம் செய்தல். |

*அட்டவணை (தொடர்ச்சி)*

| நிரல் I<br>**உத்தியோகத்தர்கள் வகுதி** | நிரல் II<br>**அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்** | நிரல் III<br>**கையளிக்கப்படும் அதிகாரங்கள்** |
|---|---|---|
| | | (VI) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் 218 முதல் 223 வரையிலான ஏற்பாடுகளுக்கு அமைய இடமாற்றம் செய்தல். (பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தவிர)<br>(VII) பணித்தடை செய்தல், பதவி நீக்கம் உள்ளிட்ட ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு.<br>(VIII) சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அல்லது அதற்கு கீழுள்ள வரிசையைச் சேர்ந்த உத்தியோகத்தரொருவரால் வழங்கப்பட்டுள்ள ஒழுக்காற்றுத் தண்டனைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகளை பரிசீலனைக்கு எடுத்தல் மற்றும் அதற்கமைய வழங்கப்பட்டுள்ள ஒழுக்காற்றுக் கட்டளையை உறுதிப்படுத்தல், திருத்துதல், மாற்றுதல் அல்லது இரத்துச் செய்தல். |
| **05.** பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினர் (பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தவிர)<br>பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்கள்<br>இணைந்த சேவைகளைச் சாராத, இல. 03/2016 எனும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் (அட்டவணை III) இல் பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் | சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் (நிர்வாகம்) | (I) தகுதிகூர்நிலைக் காலப்பகுதியின் அல்லது பதில் கடமைக் காலப்பகுதியின் பின்னர் சேவையில் நிரந்தரமாக்கல்.<br>(II) பதில் கடமைக் காலத்தை நீடித்தல் மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டல் தேவைப் பாடுகளை பூரணப்படுத்தும் பொருட்டு தகுதிகூர்நிலைக் காலத்தை உச்சமாக மூன்று வருட காலத்திற்கு நீடித்தல்.<br>(III) பதவி விலகல் கடிதங்களை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல். |
| **06.** இணைந்த சேவைகளைச் சாராத, இல. 03/2016 எனும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் (அட்டவணை III) இல் பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் | பணிப்பாளர் / சிவில் நிர்வாகம் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நடவடிக்கை முறைக்கு அமைவாக அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் 218 முதல் 223 வரையிலான ஏற்பாடுகளுக்கு அமைய இடமாற்றம் செய்தல்.<br>(II) பதில் கடமைக் காலத்தை நீடித்தல் மற்றும் வினைத்திறன் காண் தடைதாண்டல் தேவைப்பாடுகளைப் பூரணப்படுத்தும் பொருட்டு தகுதிகூர்நிலைக் காலத்தை உச்சமாக மூன்று வருட காலத்திற்கு நீடித்தல் |

அட்டவணை (தொடர்ச்சி)

| **நிரல் I**<br><br>**உத்தியோகத்தர்கள் வகுதி** | **நிரல் II**<br><br>**அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்** | **நிரல் III**<br><br>**கையளிக்கப்படும் அதிகாரங்கள்** |
|---|---|---|
| 07. பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினர் (பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தவிர) பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்கள் | சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நடவடிக்கை முறைக்கு அமைவாக அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் 218 முதல் 223 வரையிலான ஏற்பாடுகளுக்கு அமைய தனது நிர்வாக அதிகாரப் பிரதேசத்திற்குள் இடமாற்றம் செய்தல்.<br><br>(II) பின்வரும் விடயங்கள் அதாவது;<br><br>i. பதவி நீக்கம் செய்தல்;<br>ii. தகுதிகூர் நிலைக் காலப் பிரிவுக்குள் நியமனத்தை இரத்துச் செய்தல் அல்லது சேவையை முடிவுறுத்தல்; மற்றும்<br>iii. பதவி வறிதாக்கல் கட்டளைகளுக்கு எதிரான மேன்முறையீடுகளை பரிசீலனை செய்தல்.;<br>தவிர்ந்த அவர்களது நிர்வாக அதிகாரப் பிரதேசத்திற்குள் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு |
| 08. பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினர் (பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தவிர) பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்கள் | பிரதிப் பொலிஸ்மா அதிபர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நடவடிக்கை முறைக்கு அமைவாக அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் 218 முதல் 223 வரையிலான ஏற்பாடுகளுக்கு அமைய தனது நிர்வாக அதிகாரப் பிரதேசத்திற்குள் இடமாற்றம் செய்தல். |
| 09. பெரிய சார்ஜன் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினர்<br><br>பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர் | பிரதிப் பொலிஸ்மா அதிபர் | (I) பின்வரும் விடயங்கள் அதாவது ;<br>i. பதவி நீக்கம் செய்தல்;<br>ii. தகுதிகூர் நிலைக் காலப் பிரிவுக்குள் நியமனத்தை இரத்துச் செய்தல் அல்லது சேவையை முடிவுறுத்தல்; மற்றும்<br>iii. பதவி வறிதாக்கல் கட்டளைகளுக்கு எதிரான மேன்முறையீடுகளை பரிசீலனை செய்தல் ;<br>தவிர்ந்த அவர்களது நிர்வாக அதிகாரப் பிரதேசத்திற்குள் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு. |
| 10. பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினர் (பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தவிர)<br><br>பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்கள் | 1. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்<br>2. பொலிஸ் அத்தியட்சகர் (பிராந்திய பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் அல்லது செயற் பாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பான பணிப்பாளர் ஒருவர்) | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நடவடிக்கை முறைக்கு அமைவாக அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் 218 முதல் 223 வரையிலான ஏற்பாடுகளுக்கு அமைய தனது நிர்வாக அதிகாரப் பிரதேசத்திற்குள் இடமாற்றம் செய்தல். |

*அட்டவணை (தொடர்ச்சி)*

| **நிரல் I**<br><br>**உத்தியோகத்தர்கள் வகுதி** | **நிரல் II**<br><br>**அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்** | **நிரல் III**<br><br>**கையளிக்கப்படும் அதிகாரங்கள்** |
|---|---|---|
| 11. பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினர் (பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தவிர) | 1. பிரதிப் பொலிஸ்மா அதிபர்<br>2. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்<br>3. பொலிஸ் அத்தியட்சகர் | I) ஏற்புடைய நிர்வாக அதிகாரப் பிரதேசத்திற்குள் பணித்தடை செய்தல்.<br>II) ஏற்புடைய நிர்வாக அதிகாரப் பிரதேசத்திற்குள் ஒழுக்காற்று அறைத் தண்டனைகள். |
| பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்கள் | உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் | I) ஏற்புடைய நிர்வாக அதிகாரப் பிரதேசத்திற்குள் பணித்தடை செய்தல். (பொலிஸ் பரிசோதகர் தவிர).<br>II) ஏற்புடைய நிர்வாக அதிகாரப் பிரதேசத்திற்குள் ஒழுக்காற்று அறைத் தண்டனைகள். |

11-419

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.